PERMANENT REFERENCE

# A REHABILITATION AND RECONSTRUCTION PLAN FOR ALAYADIVEMBU DIVISIONAL SECRETARIAT DIVISION

BY
MISS. SOORIYAKALA SINTHATHURAI

INDEX NO : Com- 87

001-40362-0425
500

A dissertation submitted to the Faculty of Commerce and Management, Eastern University, Sri Lanka, as a partial fulfilment of the requirement of the Bachelor of Commerce Degree ( B.Com).

27031

DEPARTMENT OF COMMERCE
FACULTY OF COMMERCE AND MANAGEMENT
EASTERN UNIVERSITY
SRI LANKA

1997.

152
Library - EUSL

PROCESSED

# பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| நன்றியுரை | I |
| ஆய்வின் சுருக்கம் | II-IV |
| அத்தியாயம் – 1 | |
| ஆய்வு அறிமுகம் | 1-4 |
| அத்தியாயம் – 2 | |
| நூலாய்வு | 5-28 |
| அத்தியாயம் – 3 | |
| பிரதேச செயலக ஆய்வு | 29-46 |
| அத்தியாயம் – 4 | |
| வன்செயல்களும் பாதிப்புக்களும் | 47-69 |
| அத்தியாயம் – 5 | |
| நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ள புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகள் | 70-94 |
| அத்தியாயம் – 6 | |
| பிரச்சனைகளும் தீர்வுகளும் | 95-111 |
| அத்தியாயம் – 7 | |
| செயற்திட்ட வடிவமைப்பு | 112-122 |
| உசாத்துணை நூல்கள் | 123-124 |

## ஆய்வின் சுருக்கம்.

ஆலையடிவேம்பு பிரதேச செயலகப்பிரிவில் காலத்திற்கு காலம் ஏற்பட்டுவந்துள்ள வன்செயல்கள் கலவரங்கள் காரணமாக பல்வேறுவகையான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதை காணக்கூடியதாகவுள்ளது. அதாவது உயிரிழப்புக்கள், காயமுற்றவர்கள், காணாமற்போனவர்கள், கடத்தப்பட்டவர்கள், தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தோர்கள், இடம்பெயர்ந்து அகதிகளாகவுள்ளவர்கள் போன்ற உயிர்பாதிப்புக்களும், தனியார் வதிவிடங்கள், அரச, தனியார் தொழில்நிலையங்கள், பொதுக்கட்டிடங்கள், போன்ற சொத்துப்பாதிப்புக்களும், விவசாயம், கைத்தொழில்/வியாபாரம், சுயதொழில்கள், கல்வி, சுகாதாரம் காலச்சாரம், போக்குவரத்து போன்ற துறைரீதியான பாதிப்புக்களும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை ஈடுசெய்வதற்கும் அழிக்கப்பட்ட மக்களின் உடமைகளையும், அரச உடமைகளையும் மீண்டும் கட்டியெழுப்பவும் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரங்களை மேம்படுத்தவும் தேவையான உதவிகளை புனர்வாழ்வு புனரமைப்பு சமூகநலத்துறை அமைச்சும், பல்வேறுவகையான அரசசார்பற்ற நிறுவனங்களும் வழங்கிவருகின்றன. இவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டுவந்துள்ள புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளாக பாதிப்புற்ற இடம்பெயர்ந்த மக்களுக்கான உடனடி நிவாரணம் வழங்கல், வீட்டுத்திட்டங்களை ஏற்படுத்தி மீளக்குடியமர்த்தல் தொழிற்பாதிப்புக்களுக்கு உற்பத்திதிறன் கொண்ட தொழில்முயற்சிகளை ஏற்படுத்துதல், காயமுற்றவர்கள், உயிரிழப்புக்கள் என்பவற்றுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல், புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல், துரித அபிவிருத்தித்திட்டம் போன்ற நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளன.

இவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ள புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளின் போது பல்வேறு வகையான பிரச்சனைகளையும், தடைகளையும் பொதுமக்களும் இந்நடவடிக்கையில் ஈடுபட்டுவந்துள்ள நிறுவன உத்தியோகத்தர்களும் எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது. இடம்பெயர்ந்தோருக்கு அகதிமுகாம்களில் குடிநீர்வசதி, உணவு வசதி, சுகாதாரவசதி என்பன போதியளவு வழங்கப்படாமை, மற்றும் போதியளவு வழிவசதியும் இடங்கள், மலசலகூடவசதி

கள் காணப்படாமை இதன் மூலம் சூழல்மாசடைதலை எதிர்நோக்க வேண்டி வேண்டிருந்தமை போன்ற பிரச்சனைகள் குறிப்பிடத்தக்கது. அத்தோடு இடம் பெயர்ந்தோரை மீள்க்குடியமர்த்துவதற்கான அரசகாணிகள் காணப்படாமையும் சொந்த இடங்களுக்கு திரும்பிச்செல்வதற்கு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமையும், மீள்க்குடியமர்வுக்கான கொடுப்பனவை பெற்றுக்கொள்வதில் காலதாமதம் ஏற்பட்டதோடு கொடுப்பனவுத் தொகை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு போதாமலும் இருந்தது.

ஊனமுற்றோர், உயிரிழப்பு போன்றவற்றுக்கான நட்டயீட்டு கொடுப்பனவை பெறுவதில் பல்வேறு வகையான சிரமங்களை பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்நோக்கவேண்டியிருந்தது. பாதிப்பினை உறுதிப்படுத்துவதற்கான அத்தாட்சி பத்திரங்களை, வைத்தியசான்றிதழ்கள் போன்றவற்றினை பெற்றுக்கொள்வதில் காலதாமதம் ஏற்பட்டதோடு பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதிலும் பிரச்சனைகள் எதிர்சோக்கப்பட்டன. அத்தோடு உளரீதியாகபாதிக்கப்பட்ட சிறுவர்கள், வயோதிபர்கள், கர்ப்பிணித்தாய்மார்கள், போன்றோருக்கு நிவாரணம் வழங்குவதற்கு நிதிப்பற்றாக்குறையை நிறுவன அமைப்புக்கள் எதிர்நோக்கியதோடு சரியான புனர்வாழ்வுத்திட்டங்களை இனங்கண்டு நடைமுறைப்படுத்துவதிலும் பல்வேறுபட்ட நடைமுறைச்சிக்கல்கள் எதிர்நோக்கப்பட்டன.

சொத்துக்கள் தொடர்பாக ஏற்பட்ட பாதிப்புக்களை சரியாக பதிப்பு செய்வதற்கு காலதாமதம் ஏற்பட்டதோடு பாதிப்பு தொடர்பான அத்தாட்சிப்பத்திரங்கள், ஆவணங்கள் போன்றவற்றை பெற்றுக்கொள்வதில் தடைகள் காணப்பட்டதோடு இவற்றுக்கான இழப்பீட்டுத்தொகையும் ஒப்பீட்டு ரீதியில் மிகவும் குறைவாக காணப்பட்டது.

தொழில்முயற்சிகளுக்கான கடன்கள், நன்கொடைகளை பெற்றுக்கொள்வதில் காலதாமதமும், வழங்கப்படும். கொடுப்பனவுத் தொகைகள் மிகவும் குறைவாகவும் காணப்பட்டது. அரசசார்பற்ற அமைப்புக்கள் மூலம் தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்படும் கடன்கள் இறுக்கத்தன்மை கொண்டதாக காணப்பட்டது. அத்தோடு இவ் அமைப்புக்கள் மக்களை பலவந்தப்படுத்தி தங்கள் அதிகாரங்களை காட்டுவதாகவும் காணப்படுகின்றது.

இவை மட்டுமன்றி புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு நிதிப்பற்றாக்குறையும், திறமைமிக்க அலுவலர்பற்றாக் குறையும், நிர்வாகச் சீர்கேடுகளையும், இப்பிரதேசசெயலகம் எதிர்நோக்க வேண்டியுள்ளது. எனவே இவ்வாறான பிரச்சனைகளை எதிர்காலத்தில் எவ்வாறு தவிர்த்துக் கொள்ளலாம் என்பதைபற்றியும், எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்து வதற்கு பொருத்தமான புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகள் பற்றிய திட்டமாகவும் இவ் ஆய்வு அமைகின்றது. இவ் ஆய்வின் இறுதி அத்தியாயமாக அமைந்துள்ள செயற்திட்டவடிவமைப்பினைக் இந்நடவடிக்கைகள் பற்றி தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இந்நடவடிக்கைகள் மூலம் மக்கள் சொந்தவதிவிடங் களில் வசித்தல், சுயதொழில்முயற்சிகள் மூலம் உற்பத்தி அதிகரிப்பு, வேலை வாய்ப்பு அதிகரிப்பு, வருமான அதிகரிப்பு போன்றன ஏற்படுதல் பொதுசேவை நிலையங்களின் மூலம் மக்கள் சேவைகளை பெற்றுக்கொள்ளுதல், மற்றும் விவசா யம், கைத்தொழில், வியாபாரம், கல்வி, சுகாதாரம், கலாச்சாரம், போக்குவரத்து, தபால்சேவை, தொலைத்தொடர்பு, போன்றன முன்னேற்ற மடைந்தும்காணப்படும்.